

**Crossian Resonance**

**A Multidisciplinary Research Journal** **ISSN 0976-5417**
(A refereed Biannual Published in June and December)
**Vol. 15, No.2, December 2024**
**https://research.holycrossngl.edu.in/**

# பழமொழி நானூற்றில் கல்விச் சிந்தனைகள்

**டெய்சிபாய் சா.**
தமிழ்த்துறை (சுயநிதி), ஹோலிகிறாஸ் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629 004
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627 012

**கட்டுரைச் சுருக்கம்**

*பழமொழி நானூற்றில் மானிட வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றிய சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாகக் கல்வி, அறிவு, ஒழுக்கம், வாழ்வியல் நிலை பற்றிய பல அறிவுரைகளும் நெறிப்பாடுகளும் வழங்கப்படுகின்றன. கல்வி ஒளியை வழங்கும், முயற்சி வெற்றிக்குத் தூண்டல் போன்ற கருத்துகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கல்வியின் மூலம் கிடைக்கும் அறிவு வாழ்க்கையைச் செம்மையாக்குவதோடு சமூகத்தில் உயர்ந்த இடத்தைப் பெறவும் உதவுகிறது. பழமொழி நானூறு கல்வியின் பயன்களையும் ஆழமான சிந்தனைகளையும் எளிய முறையில் எடுத்துரைக்கிறது.*

## முன்னுரை

மனிதனின் அறிவாற்றலை மேம்படுத்திக் கொள்ள உதவுவது கல்வி. ‘கல்’ என்ற சொல்லில் இருந்து கற்றல் தோன்றியிருக்கலாம். கல்வியின் மேன்மையையும் கற்றலின் சிறப்பினையும் அறஇலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் பழமொழிநானூறு கல்வியின் முக்கியத்துவத்தையும் கற்றவர் அடையும் பயன்களையும் மிகத் தெளிவாக எடுத்தியம்புகிறது. பழமொழிகள் மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவன. நம் முன்னோர்களின் அனுபவக் குரல்களே பழமொழி என்றால் அது மிகையாகாது. முன்றுரை அரையனார் இயற்றிய பழமொழி நானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கல்விச் சிந்தனைகளை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கல்வியின் மேன்மை

நூல் பலகற்றுச் சிறந்தவர்கள் அறிவுடையவர்கள். அவ்வறிவுடையார் புகழ் நாற்றிசையும் சென்று பரவாத நாடில்லை. அந்நாடுகள் அவர்களுக்கு வேற்று நாடுகள் ஆகாது. சொந்தநாடாக விளங்கும். அவர்கள் செல்லும் வழிகளுக்குக் கட்டுச்சோறு கொண்டுசெல்ல வேண்டியதில்லை. அந்நாளில் பயணம் மேற்கொள்பவர்கள் கட்டுச்சோறு கொண்டுசெல்வது வழக்கம். இப்பெருமை யாவும் அவருக்குக் கல்வியினால் கிடைத்த பெருமையே என்பதை,

“ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு
வேற்று நாடாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில்” (பழமொழி – 55)

என்னும் பாடலில் குறிப்பிடுகிறார்.

மேலும் வள்ளுவரும் கல்வியின் மேன்மையை,

“விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்” (குறள் - 410)

***Corresponding Author:** daisybai@holycrossngl.edu.in* 

என்னும் குறளில் கற்றலின் மேன்மையைக் குறிப்பிடுவதோடு கல்லாதவரை விலங்குகளுடன் ஒப்பிட்டுக் கூறுவதைக் காணமுடிகிறது. நீதி இலக்கியங்கள் மட்டுமின்றி சங்ககாலத்திலும் கல்வியின் இன்றியாமையை பல பாடல்கள் புலப்படுத்துகின்றன.

**பெற்றோர் தரும் கல்வி**

தாய் தன் குழந்தையை ஈன்று அதனைப் பேணி வளர்க்கின்றாள். குழந்தையின் நலனில் அதிக அக்கரைக் கொள்கிறாள். தந்தையாயின் தன் குழந்தையை அறிவுமிக்கச் சான்றோனாக்க விளைகிறார். இக்கருத்தை,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குச் கடனே" (புறம் - 312)

என்னும் புறநானூற்றுப் பாடலால் அறிய முடிகின்றது. சிலைவடிக்கும் சிற்பிக்குத் தான் தெரியும் தான் செய்த பாவை பின்நாளில் அனைவரும் வணங்கும் தெய்வமாகும் என்று. அதுபோல நன்னெறி புகட்டி வளர்த்த தந்தைக்கு மட்டுமே தெரியும் தன் மகன் பார்போற்றும் உயர்ந்த நிலையினை அடைவான். அவன் கற்ற கல்வியே அவனுக்கு அணங்காகும். இக்கருத்தை பழமொழிநானூறு மிகவும் அழகாக குறிப்பிடுகிறது.

**அரசர் பெறும் கல்வி**

பழங்காலத்தில் முடிஆட்சி செய்த அரசன் மேன்மைக்கு உரியவனாக விளங்கினான். குடிமக்களைக் காக்கும் பெரும் பொறுப்பும் அரசனைச் சார்ந்திருந்தது. அரசன் தன்னை நம்பியுள்ள குடிமக்களைத் துன்புறுத்தி அவர்களிடமிருந்து இறைபொருளை அதிகமாகப் பெற்று அக்குடிமக்களுக்கு உதவுதல் என்பது மயிலினது உச்சிக் கொண்டையை அறுத்து, அதற்கு உணவாக அதன் வாயில் போடுவதற்கு ஒப்பாகும். துன்புறுத்தி அதிகவரி வாங்கிய அரசர் பின்பு என்ன உதவிகள் செய்தாலும் மக்கள் அதனை ஏற்பதில்லை. அரசன் குடிமக்களை வருத்தாது காப்பது கடமையாகும். இதனை, "கூட்டறுத்து வாயில் இடல்" என்னும் பழமொழியால் உணரப்படுகிறது. குறளும் இக்கருத்தினை,

"வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்

கோலொடு நின்றான் இரவு" (குறள் - 552)

என்னும் குறளில் குறிப்பிடுகிறார். மேலும் குடிமக்களைப் பேணாது துன்புறுத்தும் அரசன் எமனைப் போன்றவன். பகைவரிடத்து கொடியவனாக விளங்கும் அரசன் தன் குடிகளிடத்தில் அருள் உள்ளவனாக நடக்கவேண்டும் என்பதனை,

"செங்கோண்மை வேந்தர்க்கண் வேண்டும் சிறிதெனினும்

தண்கோல் எடுக்குமாம் மெய்" (பழமொழி– 210)

நல்ல கொடைப் பண்பு, செங்கோல் முறைமையும் கொண்ட சிறந்த அரசனாக இருப்பினும் பகைவர்களை எதிர்த்துச் சிதறி ஓடும்படி செய்து வெற்றி கொள்ளாத அரசன் தன் படைக்கலன்களை வைத்து அழகுபார்ப்பது நல்லதாகும் எனப் போரிடா அரசனின் இழி நிலையையும், பகைவர் பலர் கூடி தம்மை எதிர்த்து வந்தக் காலத்தில் அரசனானவன் ஒருவனாயின் வீழ்ந்துவிடக் கூடும். ஆதலால் தன் படை வலிமையைப் பெருக்கிக் கொள்வது நல்லதாகும் என அரசனுக்குரிய கல்வியைப் பழமொழிநானூறு போதிக்கிறது. அரசன் வரி வாங்கும் முறையினை வண்டினம் பூவைச் சிதைக்காது அதிலுள்ள தேனைக் குடிப்பது போல

குடிமக்களை வருத்தாது காலமறிந்து பக்குவமாக வரி வாங்க வேண்டும் என்பதையும் இந்நூல் குறிப்பிடுகிறது.

**அறிவிலிக்குப் புகட்டும் கல்வி**

மூடர்க்குப் புகட்டும் கல்வி வீணானது. அறிவுடையோர் என்றும் புல்லறிவு கொண்ட மூடர்களுக்கு உபதேசம் செய்வதற்கு முயலக்கூடாது. உடலளவில் மனிதனாக விளங்கும் மூடர்களுக்கு, உறுதிப்பொருள் பற்றிச் கூறுவது கடலினுள் மாம்பழத்தைக் கொட்டுவது போன்றது. அது பயனற்ற செயலாகும். இதனை,

"உடலா ஒருவற்கு உறுதியுணர்த்தல்

கடலுளால் மாவடித் தற்று" (பழமொழி– 120)

என்னும் பழமொழியால் விளக்கியுள்ளார். நன்னீர் பாயும் ஆறுகள் மிகுதியான வெள்ளப் பெருக்குடன் கடலில் நீரைப் பாய்ச்சினாலும் கடல் நீரின் உப்புத் தன்மை மாறுவதில்லை. அதனைப் போல் நல்லவர் தொடர்பு கீழோர் பெற்றிருப்பினும் அவர் நல்லவராகமாட்டார். மூடர்களைக் கல்வி போதித்து அறிவுடையோர் ஆக்க இயலாது. தட்டுவர் இல்லாது போயின் துடியினின்று பண் எழுவதில்லை. அதுபோல் அறிவுறுத்துவார் இன்றி அறிவிலியரின் அறிவும் செயல்படாது, அவர் கற்றும் பயனில்லை, அவருக்குக் கற்பிப்பதும் வீணாகும். இதனை, "கற்றறிவு போகாகடை" என்னும் பழமொழி குறிப்பிடுகிறது.

**வாழ்க்கைக் கல்வி**

வாழ்க்கைக்குரிய கல்வியைப் புகட்டும் நீதிநூல்கள் பல உள்ளன. இந்நூல்கள், சிறந்த வாழ்க்கைக்குத் தேயையான அறத்தை கடைப்பிடிக்கவும், வாய்மையைக் காக்கவும் ணேடிய வழிமுறைகளைப் போதிக்கின்றன.

"இல்வாழ்க்கை யானும் இலதானும் மேற்கொள்ளார்

நல்வாழ்க்கை போக நடுநின் எல்லாம்

ஒருதலையாச் சென்று துணியா தலரே

இருதலையும் காக்கழித் தார்" (பழமொழி– 46)

ஒருவன் தனக்குக் கேடுவருகின்ற காலத்திலும் பிறருக்குத் துன்பந்தராத செயல்களைத் தான் செய்ய வேண்டும். பெரிய மலைகள் கூட ஒருகாலத்தில் தேய்ந்து போகலாம். ஆனால் நாம் செய்கின்ற தீயச்செயல்கள் அதன் விளைவுகள் என்றும் வழிவழியாகத் தொடர்ந்து வரும். இதனை வள்ளுவரும்,

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட வடு" (குறள் - 129)

எனக் கூறியுள்ளார். தீயச்செயல்கள் செய்தலைக் காட்டிலும் சாதலே மேலானது எனப் பழமொழிநானூறு உரைக்கின்றது.

**முடிவுரை**

மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல கருத்துக்களைப் போதிப்பதில் பழமொழிநானூறு பெருமை பெற்ற நூல் என்பது திண்ணம். பழங்காலச் சூழலுக்கு ஏற்ப நீதியையும், அந்நீதியின் வழி நல் அறிவுறுத்தலாகிய கல்வியையும் இந்நூல் புகட்டுகிறது. அரசருக்கும், அவரின் போர்ச்சூழலுக்கும், அறிவற்ற மூடருக்கும் மக்களின் வாழ்க்கைச்

சூழலுக்கும் ஏற்றக் கல்வியை அறிவுரையாக இந்நூல் வழங்கியுள்ளது. கற்றலினால் மேன்மை பெற முடியும் என்பதையும், கற்றவருக்குக் கிடைக்கும் பெருமதிப்பையும் இந்நூலின் மூலம் முன்றுரை அரையனார் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

**துணைநூற் பட்டியல்**


1. புலியூர்க்கேசிகன் (உ.ஆ). பழமொழிநானூறு. முதல்பதிப்பு. சென்னை: சாரதாபதிப்பகம் 2010
2. சிற்பிபாலசுப்பிரமணியம். திருக்குறள். முதல்பதிப்பு. அம்பத்தூர்: தாமரை பப்ளிகேஷன்ஸ் 2016.
3. ஞா. மாணிக்கவாசகன். புறநானூறு மூலமும் உரையும். முதல்பதிப்பு. சென்னை: உமா பதிப்பகம் 1998.
4. சா.வே. சுப்பிரமணியன். சங்க இலக்கிய மூலம் முழுவதும். முதற்பதிப்பு. சென்னை: மணிவாசகபதிப்பகம் 2006.